DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | டேவிட் |
| Father's Name | : | சின்னப்பன் |
| Village | : | சுண்டம்பட்டி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 18th day of March 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது சுண்டம்பட்டியில் குடியிருந்து திருமலை நகரில் சிக்கன் கடை வைத்து வருகிறேன். எங்கள் கடைக்கு எதிரே தேவராஜ் மகால் கல்யாண மண்டபம் உள்ளது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு சிக்கன் கடையில் இருந்த போது, தேவராஜ் மகால் கல்யாண மண்டபத்திற்கு எதிரில் விபத்து ஏற்பட்டது. ஒரு பெண் ரோட்டில் சுற்றிக் கொண்டு இருப்பார். ரோட்டில் இருந்து கடந்து செல்லும் போது ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது. விபத்து ஏற்பட்ட உடன் 108 ஆம்புலன்சில் அந்த பெண்மணியை நானும் மற்றவர்களும் ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினோம். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் கையெழுத்து கேட்டார்கள், போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

நான் போலீசார் விசாரணையில் கடந்த 21.02.2016 ஆம் தேதி இரவு சுமார் 08.45 மணிக்கு சென்னை – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் தேவராஜ் திருமண மண்டபம் எதிரில் ஒரு பெண் இடதுபுறம் இருந்து ரோட்டைக் கடக்கும் போது கிருஷ்ணகிரி நோக்கி வந்த ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர் ஈஸ்வரன், த/பெ.கருப்பண்ணன், நாமக்கல் மாவட்டம் என்பவர் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அந்த பெண்ணின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் அந்த பெண்ணிற்கு பலத்த காயங்கள் ஏற்பட்டதாகவும், விபத்தை பார்த்த அவரும், அருகில் இருந்தவர்களும் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சேர்த்ததாகவும் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும், இந்த விபத்து சம்பந்தமாக 22.02.2016 ஆம் தேதி இரவு 01.00 மணிக்கு மகாராஜா கடை காவல் நிலையம் வந்து நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்ததாகவும் சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

இந்த விபத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான், சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன். இந்த விபத்தில் இறந்துபோன பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். இந்த விபத்தானது யாருடைய தவறால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் போலீசாரிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆம்புலன்சில் ஏற்றும்போது எழுதிய பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள்.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | மதுசூதனன் |
| Father's Name | : | M. சீனிவாசன் (Late) |
| Village | : | சந்தை பேட்டை, கிருஷ்ணகிரி |
| Taluk | : | |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Medicine Incharge |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 18th day of March 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி திருமலை நகரில் குடியிருந்து வருகிறேன். கோழி கம்பெனியில் மெடிசன் இன்சார்ஜ் ஆக வேலை செய்து வருகிறேன். 2016 ஆம் வருடம் விபத்து ஏற்படும் போது நான் ஐஸ்வர்யா சிக்கன் கடையில் மெடிசன் இன்சார்ஜ் ஆக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரி எங்கள் கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வந்தார். சாப்பிடுவதற்காக வாகனத்தை நிறுத்தி உள்ளார். மீண்டும் வாகனத்தை எடுக்கும்போது, மனநோயாளியான பெண் ஒருவர் திடீரென குறுக்கே வந்து விட்டதால் எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தேன். அந்த பெண்மணிக்கு தலையில் அடிபட்டிருந்தது. தோள்பட்டை, வலது மணிகட்டு, வாய், தாடை ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது. அதன் பிறகு 108 ஆம்புலன்சில் அந்த பெண்மணியை நானும் மற்றவர்களும் ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினோம். அன்று இரவு அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

விபத்து நடந்து சுமார் 1 – 1 ½ மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்தில் இறந்துபோன பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். இறந்துபோன பெண்மணி குறுக்கே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக போலீசார் காவல் நிலையத்தில் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அடுத்த நாளே காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்து போட்டேன். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.